# இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்
## பணிப்பளார் நாயகப் பதவியிற்காக விண்ணப்பம் கோரல்

விளையாட்டுத்துறை மற்றும் நிருவாகம் தொடர்பான அனுபவம் கொண்ட தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள நாடுதழுவிய சேவையில் உள்ள விஷேட தரத்தின் உத்தியோகத்தர்களுக்கு, அதற்கு சமமான தகமை கொண்ட முப்படை வீரர்கள் மற்றும் இலங்கைப் பொலிஸ் சேவையில் உள்ள / ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் அதற்கு சமமான தகமை கொண்ட தனியார் துறையில் சேவையில் ஈடுபடுவோருக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஓய்வுபெற்ற முப்படை வீரர்கள் மற்றும் ஓய்வு பெற்ற இலங்கை பொலிஸ் உத்தியோகத்தர்களின் உயர்ந்தபட்ச வயதெல்லை, விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினமன்று 57 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டியதுடன், தனியார் துறையில் சேவையில் ஈடுபடும் விண்ணப்பதாரர்களுக்காக வயது எல்லை, விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினமன்று 45 வயதை விடக் குறையாது மற்றும் 55 வயதினை விட மேற்படாதிருக்க வேண்டும்.

உரியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை (விண்ணப்பதாரர் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள நாடுதழுவிய சேவையின் விஷேட தரத்தின் உத்தியோகத்தராக இருப்பின் அவரின் விண்ணப்படிவம் உரிய அமைச்சு / மாகாண சபை / நிறுவனத்தின் பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தரின் பரிந்துரையுடன்) மற்றும் விண்ணப்பதாரி தற்போது முப்படை சேவையில் அல்லது இலங்கைப் பொலிஸ் சேவையில் ஈடுபடுவதாயின் அவரின் விண்ணப்படிவம் (உரிய அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன்) சுய விபரப்படிவத்துடன் 2025 ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியிற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகப் பதவியிற்காக விண்ணப்பம் கோரல்" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

**முகவரி:** செயலாளர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு
இலக்கம் : 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு - 07.

விண்ணப்பப்படிவத்தினை QR குறியீட்டினை ஸ்கான் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

தகவவல்களுக்காக : 011 2680174
செயலாளர், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு அமைச்சு.
திகதி: 2025.10.03